செ.வெ.எண்:07/ஜனவரி நாள்: 04.01.2016

# செய்திக்குறிப்பு

**பொது மேலாளர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், சென்னை அவர்களால்** அறிவிக்கப்பட்ட **இருட்டறை உதவியாளர்** பணிக்காலியிடத்திற்கு சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்ககத்தால் மாநில பதிவு மூப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பதிவு மூப்பு மற்றும் தகுதியுடைய பதிவுதாரர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட உள்ளனர்.

**கல்வித்தகுதி :** 12-ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழுடன் இயக்குநர், மருத்துவ கல்வித்துறை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் CRA பயிற்சி முடித்து சான்று பெற்று பதிவு செய்திருக்க வேண்டும். மேற்கண்ட சான்று வேண்டும்.

**வயதுவரம்பு : 01.07.2015** அன்று

ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் 18 முதல் 35 வரை

பிற்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 18 முதல் 32 வரை

பொதுப்பிரிவினர் 18 முதல் 30 வரை

**<u>உத்தேச பதிவு மூப்பு</u>**

அனைத்து வகுப்பைச்சார்ந்த முன்னுரிமையுள்ளவர்கள் : 29.12.2015 வரை

**முன்னுரிமையற்றவர்கள்:**

ஆதிதிராவிடர் வகுப்பினர் அருந்ததியினர் (பெண்கள் மட்டும்) : 02.05.2014 வரை

ஆதிதிராவிடர் வகுப்பினர் (பெண்கள் மட்டும்) : 29.12.2009 வரை

பொதுப்பிரிவினர் (பெண்கள் மட்டும்) : 20.07.2009 வரை

ஆதிதிராவிடர் வகுப்பினர் அருந்ததியினர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) : 16.06.2011 வரை

ஆதிதிராவிடர் வகுப்பினர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) : 26.04.2010 வரை

பழங்குடியினர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) : 29.12.2015 வரை

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) : 20.04.2010 வரை

பொதுப் பொதுப்பிரிவினர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) : 08.10.2009 வரை

மேற்கண்ட தகுதிகள் உடைய பதிவுதாரர்கள் **இருட்டறை உதவியாளர்** பணிக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் **உடன்** நேரில் வருகை புரிந்து பரிந்துரைக்கப்படவுள்ள பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதனை உறுதி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**